இணைப்பு

[511-ம் பக்கத்தில் 71-ம் எண்ணுள்ள வெள்ளி குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

விடை : அ, (இ) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட கனிப்பொருட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படுகின்றன.

1. திருநெல்வேலி வட்டம், தாழையூத்து, நாங்குனேரி வட்டம், திசையன் விளை, வள்ளியூர், கோவில்பட்டி வட்டத்திலுள்ள கபத்தாறு, வள்ளிநாயகபுரம், கடலை சங்கரன்கோவில் வட்டத்திலுள்ள ஊத்தமலை ஜிமீந்தாரி, பந்தப்புளி ஆகியவிடங்களில் காணப்படும் சுண்ணும்புக்கல் (Limestone) தூத்துக் குடியின் வடகிழக்கிலுள்ள தீவுப்பகுதிகளில் காணப்படும் கிளிஞ்சல் சுண்ணும்பு.

2. இம் மாவட்டத்தில் கடல்குடி, விளாத்திக்குளம், வேப்பலோடை, மைப் பாறை ஆகியவிடங்களுக்கருகில் கடலோரம் பகுதிகளில் காணப்படும் களிக்கல் (Gypsum).

3. திசையன்விளையைச் சுற்றிலும் நாங்குனேரி வட்டத்திலுள்ள கட லோரப் பகுதிகளில் காணப்படும் களிமண் (Clays)

4. நாங்குனேரி வட்டம் நாவலடி ஓவரி பகுதியிலும், கோவில்பட்டி வட்டம் வேம்பார்-கல்லாறு பகுதியில் காணப்படும் பளிங்கு போன்ற ஒருவகைக் கனிப்பொருள் (Garment) இல்மெனைட் (Ilmenite) மணல் வகைகளைக் கொண்ட கடற்கரை மணல்.

பொருளாதார வகையில் ஆதாயமில்லாத பிற கனிப்பொருட்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :

சங்கரன்கோவில் வட்டத்தில் குரிஞ்சான்குளத்திற்கருகில் காணப்படும் கிராபைட் (Graphite) தென்காசி வட்டம் நெட்டூர், சிங்காத்தகுறிசி ஆகிய விடங்களில் காணப்படும் வெர்மிகுலைட் (Vermiculite), கடயத்திற்கருகில் காணப்படும் இரும்புக்கனி, நாங்குனேரி, திருச்செந்தூர் வட்டங்களின் சில பகுதிகளில் காணப்படும் கங்கர் (Kankar)

இம்மாவட்டத்தில் காணப்படுவதாகக் கூறப்படும் பிற கனிப்பொருட்கள் பின்வருமாறு :

பனகுடிக்கு அருகிலும், களக்காடு பாபநாசம், தெற்கு வீரநல்லூர், ஓதக் காடு ஆகியவிடங்களில் சில பகுதிகளிலும், மீனவன் குளத்திலும் காணப்படும் கிராபைட் (Graphite துறையூர், விக்கிரமசிங்கபுரம் ஆகியவிடங்களுக் கருகில் காணப்படும் மைக்கா (Mica), மூன்றடைப்பு, பத்தாங்காடு ஆகிய விடங்களுக்கருகில் காணப்படும் செம்பும் பிற சல்பைடுகளும் (Sulphides) இந்தக் கனிப்பொருட்களில் எதுவும் பொருளாதார வகையில் மதிப்பு வாய்ந்த தல்ல.